OS:302/2018

Date: 27.11.2023

பெயர்  : சந்திரன்

**பிரதிவாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>-** வாதிகள் தரப்பில்

ராமசாமி கவுண்டர் என்பவர் எனது தாத்தா. ராமசாமி கவுண்டர் மனைவி பெயர் சின்னம்மாள். 1971 ம் ஆண்டு பாகபத்திரத்தில் எத்தனை செட்டியூல்களாக சொத்துக்கள் பிரிக்கப்பட்டுள்ளது என்றால் A முதல் H வரையாக 8 செட்டியூல்களாக பிரிக்கப்பட்டுள்ளது. 1971 ம் ஆண்டு பாக ஆவணத்தை முழுவதுமாக படித்து பார்த்துள்ளேன். மேற்படி பத்திரத்தில் பொதுசாரா இருக்கிறதா என்றால் இருக்கிறது. மேற்படி ஆவணத்தில் ராமசாமி கவுண்டரும் மேற்படியாரின் மனைவி சின்னமாளும் ஆண்டு அனுபவித்துகொண்டும் அவர்கள் ஆயுளுக்கு பின் தொடர்ச்சி உள்ளது என்று சொன்னால் வீடு  மட்டும் உள்ளது. A செட்டியூலில் குறிப்பிட்டுள்ள சொத்தை 1974 மற்றும்  1978 ஆகிய ஆண்டுகளில் எனது தந்தை சண்முகமும், எனது தாயார் ராமாயும் சேர்ந்து கிரயம் பெற்றுள்ள ஆவணங்களை நீதிமனற்த்தில் தாக்கல் செய்துள்ளேன்  என்றால் சரிதான். அந்த கிரய ஆவணங்களில் ராமசாமி மட்டும் கிரயம் செய்து கொடுத்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**(குறுக்குவிசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.)**

ஒப்பம்/-DW1

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.